ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**22.03.2023**

தலைப்புச்செய்திகள்

1.நாட்டில் வரும் ஆண்டுகளில் நூறு5-ஜி தொழில்நுட்பஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்றுபிரதமர்திரு. நரேந்திரமோடிதெரிவித்திருக்கிறார்.

2.குடியரசுத்தலைவர் திருமதிதிரௌபதிமுர்முநடப்பாண்டிற்கானபத்மவிருதுகளைபுதுதில்லியில் இன்றுவழங்குகிறார்.

3.காஞ்சிபுரத்தைஅடுத்தகுருவிமலைபகுதியில் பட்டாசுதொழிற்சாலையில் இன்றுநேரிட்டவிபத்தில் ஒருபெண் உட்பட6பேர் உயிரிழந்தனர்.

4.உலகதண்ணீர் தினம் இன்றுகடைபிடிக்கப்படுகிறது.

5.சென்னையில் இந்தியாவிற்குஎதிரான 3ஆவது இறுதிஒருநாள் சர்வதேசகிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியாமுதலில் பேட் செய்கிறது.

இனிவிரிவானசெய்திகள்

பிரதமர்

நாட்டில் வரும் ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட 5-ஜி தொழில்நுட்பஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும் என்றுபிரதமர்திரு. நரேந்திரமோடிதெரிவித்திருக்கிறார்.

புதுதில்லியில் புதியசர்வதேசதொலைத்தொடர்பு,படைப்பாற்றல் தொழில்நுட்பமையஅலுவலகத்தை இன்றுதுவக்கிவைத்துபேசியஅவர், டிஜிட்டல் தொழில்நுட்பபாதையில் நம் நாடுவேகமாகமுன்னேறிவருவதாகஎடுத்துரைத்தார்.

5-ஜி தொழில்நுட்பம் மிகதுரிதமாகமுன்னெடுத்துச்செல்லப்படுவதாக கூறியபிரதமர்,அதுதொடங்கப்பட்ட 6 மாதகாலத்திற்குள் 6-ஜி தொழில்நுட்பம் குறித்துநாம் பேசதொடங்கியிருப்பதாகபெருமிதம் தெரிவித்தார்.

இதுவேபுதிய இந்தியாவின் நம்பிக்கைஎன்றும் அவர் எடுத்துரைத்தார்.

கடந்த 120 நாட்களில் 125க்கும் மேற்பட்டமாவட்டங்களில் 5-ஜி தொலைதொடர்புசேவைகள் தொடங்கப்பட்டிருப்பதாகசுட்டிக்காட்டினார்.

கடந்தசிலஆண்டுகளாக 28 லட்சம் கோடிரொக்கம் நேரடிபணபரிவர்த்தனைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறியஅவர் 800 கோடி டிஜிட்டல் சார்ந்தபணபட்டுவாடாக்கள் நடைபெற்றிருப்பதாககுறிப்பிட்டார்.

இதன் ஒருபகுதியாகபாரத் 6-ஜி தொலைநோக்குஆவணத்தைவெளியிட்டஅவர் 6-ஜி ஆராய்ச்சிமேம்பாட்டுதொழில்நுட்பத்தையும் அறிமுகம் செய்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியமத்தியதொலைதொடர்புமின்னனுதகவல் தொழில்நுட்பத்துறைஅமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் டிஜிட்டல் இந்தியாதொழில்நுட்பத்தால் கோடிக்கணக்கானமக்கள் பயன்பெற்றுவருவதாக கூறினார்.

டிஜிட்டல் பொதுகட்டமைப்புசிக்கலானபிரச்சனைகளுக்குதீர்வுகாணதிறன்படைத்ததாகும் என்று கூறியஅவர் உலகளாவியதுரிதசேவையாகநம் நாட்டின் 5-ஜி அலைக்கற்றைசேவைதிகழ்கிறதுஎன்றார்.

இந்தஅலைக்கற்றைசேவைதொடங்கி 6 மாதங்களேமுடிவடைந்த இக்குறுகியகாலத்தில் ஒருலட்சத்து 15 ஆயிரம் இடங்களில் 5ஜி சமிங்ஞைகள் ஒலிர்வதாககுறிப்பிட்டார்.

பலஆண்டுகளுக்குமுன்னர் ஒருதொலைபேசிகோபுரத்தைஏற்படுத்த 220 தினங்கள் பிடித்ததாகவும்,ஆனால் தற்போது 7 தினங்களுக்குள் அதனைஏற்படுத்தமுடிவதாகவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

************

குடியரசுத்தலைவர்

சுதந்திரஅமுதபெருவிழாவைநாட்டுமக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிவருவதாககுடியரசுத்தலைவர் திருமதிதிரௌபதிமுர்மு கூறியிருக்கிறார்.

செகந்திராபாத்தில் நிகழ்ச்சிஒன்றில் இன்றுபேசியஅவர் நாட்டின் இளையோர் விடுதலைபோராட்டவீரர்கள் பற்றியும்,விடுதலைக்கானமதிப்பீடுகளையும் தெரிந்துகொள்வதன் அவசியத்தைவலியுறுத்தினார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் அமைந்துள்ளநட்சத்திரதோட்டம், மூலிகைதோட்டம் போன்றவற்றைஏற்படுத்தியமுன்னோர்களின் முயற்சிகளைஅவர் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தெலுங்கானாஆளுநர் டாக்டர் தமிழிசைசௌந்தர்ராஜன்,

மத்தியசுற்றுலாஅமைச்சர் திரு.ஜி.கிஷன் ரெட்டிஉள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

இதனிடையேநடப்பாண்டிற்கானபத்மவிருதுகளைகுடியரசுத்தலைவர் புதுதில்லியில் இன்றுவழங்குகிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் 6 பத்மவிபூஷன், 9 பத்ம பூஷன் 91 பத்ம ஸ்ரீ விருதுகள் வழங்கப்படஉள்ளன.

************

மாண்டவியா

கோவைரயில் நிலையம் அருகேஉள்ளBSNL அலுவலகத்தில் மத்தியசுகாதாரகுடும்பநலஅமைச்சகத்தின் கீழ் மத்தியஅரசுஊழியர்களுக்கானசுகாதாரதிட்டநலமையம் இன்றுசெயல்பாட்டிற்குவந்தது.

இத்துறைக்கானமத்தியஅமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியாகாணொலி மூலம் இதனைதுவக்கிவைத்தார்.

2014-ஆம் ஆண்டு 25 சுகாதாரநலமையங்கள் மட்டுமே இருந்தநிலையில் தற்போது 79 சுகாதாரநலதிட்டமையங்கள் செயல்படுவதாகஅவர் பெருமிதம் தெரிவித்தார்.

மத்தியஅரசுஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்றஊழியர்களுக்குதரமானசுகாதாரசேவைகளைவழங்க இம்மையங்கள் வகைசெய்வதாகஅவர் கூறினார்.

ஏராளமானமத்தியஅரசுஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

************

ஜவுளிபூங்கா

பிரதமரின் மித்ராபூங்காதிட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம் இ-குமாரலிங்கபுரம் கிராமத்தில் நாட்டின் முதல் ஜவுளிபூங்காஅமைப்பதற்கானபூர்வாங்கபணிகளைமுதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் இன்றுமாலைதுவக்கிவைக்கிறார்.

சென்னைஅண்ணா நூற்றாண்டுநினைவு நூலகஅரங்கில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் மத்தியவர்த்தகதொழில்துறைஅமைச்சர் திரு.பியூஷ்கோயல்,மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணைஅமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

மத்தியமாநிலஅரசுகளின் நிதிஉதவியுடன் 2 ஆயிரம் கோடிரூபாய் மதிப்பீட்டிலான இந்ததிட்டத்தின் மூலம் 2 லட்சம் பேரின் வேலைவாய்ப்பிற்குவகைசெய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்து 52 ஏக்கர் பரப்பளவில்,அதிநவீனஉள்கட்டமைப்பு,சிறப்புஉற்பத்திவசதிகள் உட்படஉயர் தொழில் நுட்பங்களுடன் சர்வதேசதரத்தில் இந்தபூங்காஅமையஉள்ளது.

************

யுகாதி

தெலுங்கு,கன்னடபுத்தாண்டானயுகாதிதிருநாள் இன்றுஉற்சாகத்துடன் கொண்டாடப்பட்டுவருகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோதிவிடுத்துள்ளவாழ்த்துசெய்தியில் நம்பிக்கையையும்,புதியதொடக்கத்தையும் பிரதிபலிக்கும் உற்சாகமிகு இவ்விழாவில் அனைத்துமக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும்,நலமும் உண்டாகவாழ்த்தியுள்ளார்.

முதலமைச்சர்திரு. மு.க.ஸ்டாலின் உட்படபல்வேறுதலைவர்கள் யுகாதிநல் வாழ்த்துக்களைதெரிவித்துக்கொண்டுள்ளனர்.

வசந்தகாலத்தைவரவேற்கும் வகையில் தெலுங்கு,கன்னடமொழிபேசும் மக்கள் புத்தாடைகளைஉடுத்தி, இனிப்புகள் பரிமாறி இந்நாளைமகிழ்ச்சியுடன் கொண்டாடிவருகின்றனர்.

யுகாதிதிருநாளைஒட்டிவேலூர் திருமலைதிருப்பதிதேவஸ்தானமையம் மற்றும் ஜலகண்டீஸ்வரர் ஆலயங்களில் சுவாமிக்குசிறப்புஅலங்காரங்களுடன் மகாதீபாராதனைகள் நடைபெற்றதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

விபத்து

காஞ்சிபுரத்தைஅடுத்தகுருவிமலைபகுதியில் பட்டாசுதயாரிக்கும் தொழிற்சாலையில் இன்றுநேரிட்டவிபத்தில் ஒருபெண் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

காயமடைந்த 13 பேர் காஞ்சிபுரம் அரசுதலைமைமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தவிபத்துநேரிட்டபோது இத்தொழிற்சாலையில் 25க்கும் மேற்பட்டதொழிலாளர்கள் பணிபுரிந்ததாகஎமதுகாஞ்சிபுரம் செய்தியாளர் சிவகுமார் தெரிவிக்கிறார்.

************

தண்ணீர்தினம்

உலகதண்ணீர்தினம் இன்றுகொண்டாடப்படுகிறது.

நீர் சேமிப்பின் அவசியத்தைவலியுறுத்தி 1993ஆம் ஆண்டுமுதல் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

நீர் பற்றாக்குறை,சுகாதாரமானகுடிநீருக்குவழிகோலும் மாற்றங்கள் என்பதைகருப்பொருளாககொண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு.நரேந்திரமோதிதலைமையில் ஜல்ஜீவன் இயக்கம்,உள்ளிட்டபல்வேறுநீர் மேலாண்மைதிட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சூழலில் இதுவரை 11-அரை கோடிவீடுகளுக்குகுழாய் மூலம் பாதுகாப்பானகுடிநீர் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றரைலட்சம் கிராமங்களில் வீடுதோறும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தினத்தைஒட்டிமுதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்விடுத்துள்ளசெய்தியில் உயிர் நாடியானதண்ணீரைபாதுகாக்கவேண்டும் என்றுஅறிவுறுத்தினார்.

நீரைமுறையாகபாதுகாப்பதுஅவசியம் என்றுவிருதுநகர் மாவட்டஆட்சித்தலைவர் திரு.ஜெயசீலன் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தண்ணீர்தினத்தைஒட்டிதமிழகத்தில் உள்ளஅனைத்துகிராமஊராட்சிகளிலும் கிராமசபை கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

கிருஷ்ணகிரிமாவட்டத்தில் மத்தியஅரசின் ஜல் சக்திதிட்டத்தின் கீழ் அனைவருக்கும் தரமானகுடிநீர் வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டிருப்பதாகஆட்சித்தலைவர் திரு.தீபக் கிராமசபைக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தண்ணீரைசிக்கனமாகபயன்படுத்தவேண்டியதன் அவசியத்தைஅவர் வலியுறுத்தினார்.

திருச்சிசீகம்பட்டிகிராமம்,மதுரைஆலத்தூர் ஊராட்சியில் ஆட்சித்தலைவர்கள் தலைமையில் கிராமசபைக்கூட்டங்கள் இன்றுநடைபெற்றன.

இந்நாளைஒட்டிநாமக்கல் சேலம் மாவட்டங்களில் நடைபெற்றவிழிப்புணர்வுபேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

************

தூய்மைபணியாளர்

தமிழகத்தில் தூய்மைபணியாளர் நலவாரியத்திற்குபுத்துயிர் ஊட்டப்படவேண்டும் என்றுதேசிய தூய்மைபணியாளர் ஆணையத்தலைவர் திரு.எம்.வெங்கடேசன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர் நாடுமுழுவதும் மனிதகழிவுகளைமனிதனேஅகற்றும் நிலையைதடுக்கமத்தியஅரசுசட்டம் இயற்றியுள்ளபோதிலும் தமிழகம் உட்படசில இடங்களில் அந்நிலைதொடர்வதாகசுட்டிக்காட்டினார்.

மாநிலத்தில் தூய்மைபணியாளர்களின் குறைகள் மற்றும் புகார் மீதுசுதந்திரமாகநடவடிக்கைஎடுக்கஅவர்களுக்கானதனிஆணையம் அமைக்கப்படவேண்டும் என்றார்.

************

இருவரி

கரூர் மாவட்டத்தில் அனைவருக்கும் இ-சேவைமையதிட்டத்தின் கீழ் இ-சேவைமையம் அமைத்துநடத்தஆர்வமுள்ளவர்கள் வரும் 14ஆம் தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்குமாறுஆட்சித்தலைவர் திரு.பிரபுசங்கர் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் 49 ஆவதுசர்வதேசபின்னலாடைகண்காட்சி இன்றுதொடங்கியது.

செயற்கை நூலால் ஆனஆடைகள்,மறுசுழற்சிஆடைகள்,குழந்தைகளுக்கானநவீனஆடைகள் இதில் காட்சிபடுத்தப்பட்டுள்ளன.

************

கிரிக்கெட்

சென்னையில் இந்தியாவிற்குஎதிரான3ஆவது இறுதிஒருநாள் சர்வதேசகிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்றுமுதலில் பேட் செய்யும் ஆஸ்திரேலியாசற்றுமுன் 2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி13ரன் எடுத்திருந்தது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா 1 போட்டியில் வெற்றிபெற்றுசமநிலையில் உள்ளதால் இன்றையபோட்டிமுக்கியத்துவம் பெறுகிறது.

************

**ISSF**

போபாலில் நடைபெறும் ISSFசர்வதேசதுப்பாக்கிசுடும் சாம்பியன் பட்டபோட்டியின் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சரப்ஜித்சிங் தங்கப்பதக்கத்தைவென்றுள்ளார்.

************

பேட்மிண்டன்

சுவிட்சர்லாந்துBasel-இல் நடைபெறும் ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின்

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இன்று

இந்தியாவின் மஞ்சுநாத்,கிடாம்பி ஸ்ரீகாந்த், லக்ஷயா சென், H.S.பிரணாய் இன்றுகளமிறங்குகின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில்

இந்தியாவின் **PV Sindhu** - சுவிட்சர்லாந்தின் **J. Stadelmann**-யும்

**Bansod** - மலேசியாவின் **K. Selvaduray**எதிர்கொள்கின்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில்

இந்தியாவின் ராங்கிரெட்டி- சிராக் ஷெட்டி இணை–மலேசியாவின் **Boon, Wong** இணையைஎதிர்கொள்கிறது.

************

இத்துடன் இந்தசெய்தியறிக்கைமுடிவடைந்தது

************